# <u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 30.10.2019 (புதன் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 30.10.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.11.08.2019–ன் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ் மற்றும் 08/2019 மாத இதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினகரன் (தொழில் மலர்) | 23,100/– |
| 2 | தினமணி (Express Publication) | 25,000/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 258**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்திட, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் இந்நகராட்சி பகுதிகளில் சேதமடைந்த சாலைகள் சீரமைத்திட தொகை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்ய கருத்துரு கோரப்பட்டதில், நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஒட்டன்சத்திரம் நகராட்சி தாராபுரம் சாலை பிரிவு பி.என்.கே.மண்டபம் முதல் நாகணம்பட்டி, தீயணைப்பு நிலையம் வழியாக திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை செக்போஸ்ட் முடிய உள்ள சாலையினை சீரமைத்து (நாகணம்பட்டி பைப்பாஸ் சாலை) தார்ச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.200.00 |

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிதி நிலையினை கருதி இப்பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.200.00 இலட்சத்தினை முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து உரிய உத்திரவு வழங்கவும், மேற்படி பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 259**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலைய புதிய கடை எண்.14 அதன் உரிமையாளர் திரு.ஆர்.முருகன், த/பெ.ராமுத்தேவர் வினோபா நகர் என்பவரால் பொது ஏலம் மூலம் உரிமம் வழங்கப்பட்டு கடை நடத்தி வந்த நிலையில் வியாபார நஷ்டம் காரணமாக மேற்படி கடையினை நடத்த இயலாததாக தெரிவித்து 30.09.2019–ம் நாளில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி கடையினை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்
2. நகராட்சியின் வருவாயினை கருதி வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி, பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 260</u>**

**<u>பொருள் : 4</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2019–க்கான 29 வாக்குச்சாவடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படி, ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாக்குச்சாவடிகளில் வாக்குச்சவாடி எண் மற்றும் தேவையான வாக்குச்சாவடிகளில் சாய்வுதளம், கதவு, ஜன்னல்களை சரிசெய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், அதற்கான செலவினம் தொகை ரூ. 2.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 261</u>**

**<u>பொருள் : 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்.3, 4 மற்றும் 5 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் வார்டு எண்.3–ல் காவிரி குடிநீர் மேல்நிலைத் தொட்டிற்கு தண்ணீர் ஏற்ற பைப்லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு தீர்மான எண்.252 நாள்.20.09.2019–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 27.09.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 0.08 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. எம்.முத்துக்கண்ணன் | 1.06 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு. ஹச்.முகமது ரஸ்மி என்பவர் 0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஹச்.முகமது ரஸ்மி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 262</u>**

**<u>பொருள் : 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் வார்டு எண்.1, 2, 3, 4, 7, 8, 11, 12, 13 மற்றும் 17–ல் உள்ள பயனற்ற ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு தீர்மான எண்.253 நாள்.20.09.2019–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 27.09.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எம்.முத்துக்கண்ணன் | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 3.05 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு. எம்.முத்துக்கண்ணன் என்பவர் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.முத்துக்கண்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 263</u>**

**<u>பொருள் : 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் பூங்கா இடங்கள், நகராட்சி அலுவலக கட்டிடங்கள் மற்றும் வடிகால் பகுதியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு தீர்மான எண்.254 நாள்.20.09.2019–ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 27.09.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எம்.முத்துக்கண்ணன் | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 3.05 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு. எம்.முத்துக்கண்ணன் என்பவர் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.முத்துக்கண்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 264</u>**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2019—க்கான 29 வாக்குச்சாவடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாக்குச்சாவடிகளில் வாக்குச்சவாடி எண் மற்றும் தேவையான வாக்குச்சாவடிகளில் சாய்வுதளம், கதவு, ஜன்னல்களை சரிசெய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள நாள்.15.10.2019—ம் கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | எண்ணம் /மீட்டர் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். | கே.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். |
|---|---|---|---|---|---|
| 1 | PCC 1:4:8 | cum | 4045.00 | 4200.00 | 4300.00 |
| 2 | Brick work | cum | 6120.00 | 6200.00 | 6400.00 |
| 3 | Plastering work | sqm | 218.00 | 220.00 | 225.00 |
| 4 | Booth no laying work | Nos | 225.00 | 240.00 | 250.00 |
| 5 | Door repair work | Nos | 2100.00 | 2200.00 | 2500.00 |
| 6 | Window repair work | Nos | 1650.00 | 1600.00 | 1800.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் எம்.எம்.கே கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனம் வரப்பெற்றதை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் கடித வழிகாட்டுதலின்படி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 265**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு புதிய வாகனம் TATA Ace 4 வாகனங்களுக்கு 30.10.2019—ம் நாளுடன் வாகன காப்பீடு கால அளவு முடிவுறுவதால், 2019—20—ம் ஆண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள 15.03.2019—ம் தேதிய மன்ற அனுமதியின்படி, உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு ரூ.2,26,686/— தொகையினை செலவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்காணும் புதிய வாகனங்களுக்கு,

| வ.எண் | வாகன எண் |
|---|---|
| 1 | TATA Ace - TN 94 Z 6286 |
| 2 | TATA Ace - TN 94 Z 6305 |
| 3 | TATA Ace - TN 94 Z 6279 |
| 4 | TATA Ace - TN 94 Z 5613 |

காப்பீடு புதுப்பித்தல் பணி செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.84,000/—க்கான Future Generali India Insurance Company Ltd, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்காணும் வாகனங்களுக்கு புதிய காப்பீடு புதுப்பிக்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/—க்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 266**

**<u>பொருள் : 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.11.08.2019–ன் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ் மற்றும் 08/2019 மாத இதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாலை முரசு (வைர விழா மலர்) | 26,250/– |
| 2 | தினமலர் (தொழில் மலர்) | 27,300/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 267</u>**

**<u>பொருள் : 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது மக்களுக்கு குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்துவதன் அவசியத்தை நகரில் பொது மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களிலும் 1 முதல் 18 வார்டு பகுதிகளிலும் விளம்பர போர்டுகள் தயார் செய்து பொருத்தி கொடுத்தமைக்காக கருடா ஸ்டிக்கர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.58,700/– மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பயன்பாட்டின் அவசியம் கருதி, மேற்கொள்ளப்பட்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 268</u>**

**<u>பொருள் : 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அலுவலக கட்டிடங்கள், அரசு கட்டிடங்கள், தனியார் கட்டிடங்களில் ஏற்படுத்தப்பட்ட மழைநீர் கட்டமைப்பினை புகைப்படங்கள் எடுத்து ஆல்பம் தயாரித்து கொடுத்தமைக்கான விநாயகா விடியோ அண்டு ஜெராக்ஸ் ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.13885/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம்
2. அரசின் சிறப்பு திட்டமாக செயல்படுத்துவதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 269</u>**

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 11 வது வார்டு மேட்டுப்பட்டி புல எண்–186/1,2,3 ஆகிய பகுதிகளில் நகராட்சி மூலம் குடிநீர் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் திரு.கே.வீரப்பன் மற்றும் திருமதி.ஆராயம்மாள் ஆகியோர்களால் மேற்படி பாதை இடம் தொடர்பாக பழனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்–OS NO-722/2015-ன்படி வழக்கு தொடரப்பட்டு நகராட்சிக்கு எதிராக தீர்ப்புரை வழங்கப்பட்டதை எதிர்த்து அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்கள் மூலமாக மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு நடைப்பெற்ற வருகிறது. அதற்கான நீதிமன்ற கட்டணம், ஆவணங்கள் கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.25,000/– கேட்டு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. பொதுமக்களின் நலன் கருதி மேல்முறையீடு செய்து வழக்கினை எதிர்கொள்ள வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 270**

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் அனுமதியற்ற வாகனங்கள் நிறுத்தும் இடங்களை முறைப்படுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.18342/2019/டிபி2, நாள் 07.09.2019–ன்படி நகராட்சி பகுதிகளில் உள்ள அனுமதியற்ற வாகனங்கள் நிறுத்திமிடம் தொடர்பாக இடங்கள் கண்டறிந்து துறை அலுவலர்கள் மற்றும் வாடகை வாகன உரிமையாளர்கள் கூட்டங்கள் நடத்தி அறிக்கை செய்த செலவினத்தை தொகை ரூ.15500/– வழங்க கேட்டு விநாயகா விடியோ அண்டு ஜெராக்ஸ் ஒட்டன்சத்திரம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றிக்கையில் தெரிவித்துள்ளவாறு அனுமதியற்ற வாடகை வாகனம் நிறுத்துமிடங்கள் முறைப்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கான செலவினத்தை தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 271**

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் –2019–க்கான நகராட்சியால் 18 வார்டுகளுக்கு 29 வாக்குசாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியாக மேற்படி வாக்கு சாவடி மற்றும் வாக்காளர் பட்டியல் தொடர்பான பணிகள் மேற்கொண்டமைக்காக பணி மேற்கொண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற செலவினப்பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | விநாயகா விடியோ அண்டு ஜெராக்ஸ் ஒட்டன்சத்திரம் | 31510/– |
| 2 | ஸ்ரீ சிவசக்தி அப்செட் பிரிண்டர்ஸ் , ஒட்டன்சத்திரம் | 4166/– |

மேற்காணும் பட்டியலினை அதன் நிறுவனங்களுக்கு வழங்க அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. உள்ளாட்சி தேர்தல் பணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிக்கான செலவினத்தை தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 272**

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக DBC பணியாளர்களைக் கொண்டு பணி செய்து வருவதும், பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளதால், வருட காலண்டர் ஸ்டிக்கர், டோர் ஸ்டிக்கர் மற்றும் விழிப்புணர்வு நோட்டீஸ் என தலா 10,000 எண்ணம் வீதம் 30,000 ஸ்டிக்கர்ஸ் அரசு சார்ந்த அச்சு நிறுவனத்திடமிருந்து வாங்கிக்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரம் மற்றும் பொதமக்களின் நலன் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்யவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 273**

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.11.08.2019–ன் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ் மற்றும் 09/2019 மாத இதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினதந்தி (தொழில் மலர்) | 24,255/– |
| 2 | வணக்கம் இந்தியா | 9,950/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 274**

**பொருள் : 18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் புல எண்.491/10—ல் பொதுப்பாதை இடம் தொடர்பாக திரு.வடிவேல், திரு.ராமசாமி, திரு.தங்கவேல் மற்றும் மயில்சாமி ஆகியோர்களால் மேற்படி பாதை இடம் தொடர்பாக ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS No.72/2019-ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி வழக்கினை நகராட்சி மூலம் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்து வழக்கினை எதிர்கொள்ள அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்கள் மூலமாக வழக்கு நடைப்பெற்று வருகிறது. அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.25,000/— கேட்டு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 275**

**பொருள் : 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6 வது வார்டு பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால் ஆண்டவர் அச்சகம் அருகில் மற்றும் பிரசன்னா வீடு அருகில் 100 mm சலுஸ் வால்வு மற்றும் உதிரி சாமான்கள் சப்ளை செய்து பொருத்தி கொடுத்து வால்வு தொட்டி அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.40,000/— மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ள தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 276**

**பொருள் : 20**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019—20—ம் ஆண்டிற்கு பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பயன்பாடு முதலான 3 வாகனங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள நாள்.04.10.2019—ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு,

| Sl.No | Vehicle Details | Mettupalayam Auto Service Centre, Raja Nagar, Poyampalayam pirivu south, P.N.Road, Thirupur-641602 | Best Motors Works, 1-4-1, Narippalayam Road, Odanthurai, Mettupalayam-641301 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | TN 57 AW 5529 (Eicher Dumper Placer) | 1,27,200/- | 1,42,950/- |
| 2 | TN 57 R 2362 (Tipper lorry) | 1,26,800/- | 1,32,800/- |
| 3 | TN 57 AW 4437 (TATA Ace Tipper) | 71,750/- | 85,950/- |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு Mettupalayam Auto Service Centre, Thirupur என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
1. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Mettupalayam Auto Service Centre, Thirupur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 277**

**பொருள் : 21**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தாராபுரம் பைப்பாஸ் சாலையில் சாலை அபிவிருத்தி பணி நடைபெற்று வருவதால் சாலையின் நடுவில் அகற்றப்பட்ட உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள மின் கம்பங்கள் மற்றும் உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ள மோட்டார்கள், தெருவிளக்கு பராமரிப்பு சாமான்கள் ஆழ்துளை கிணறு உதிரி சாமான்கள் பழைய சாமான்கள் இருப்பு பதிவேடு 2019–20–ன்படி, பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. நகராட்சியின் வருவாயினை கருதி நகராட்சி பொறியாளர் அறிக்கையின்படி, பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 278**

**பொருள் : 22**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6 வது வார்டு பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால் ஆண்டவர் அச்சகம் அருகில் மற்றும் பிரசன்னா வீடு அருகில் 100 mm சுலுஸ் வால்வு மற்றும் உதிரி சாமான்கள் சப்ளை செய்து பொருத்தி கொடுத்து வால்வு தொட்டி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நாள்.09.10.2019–ம் கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | எண்ணம் /மீட்டர் | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். | கே.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். |
|---|---|---|---|---|---|
| 1 | 100 mm Sluice value | Nos | 8567.00 | 8700.00 | 8800.00 |
| 2 | 100 mm GI balance | Nos | 182.00 | 185.00 | 200.00 |
| 3 | 110 mm PVC L blow | Nos | 212.00 | 215.00 | 225.00 |
| 4 | 110 mm PVC MTA | Nos | 139.00 | 140.00 | 150.00 |
| 5 | 110 mm PVC Coupling | Nos | 92.00 | 95.00 | 100.00 |
| 6 | 140 mm X110 mm Reduser | Nos | 143.00 | 145.00 | 155.00 |
| 7 | 140 mm PVC Pipe | M | 395.00 | 400.00 | 420.00 |
| 8 | 110 mm PVC Pipe | M | 221.00 | 225.00 | 235.00 |
| 9 | Bolt nut | Nos | 45.00 | 50.00 | 60.00 |
| 10 | 200 mm pvc pipe | M | 810.00 | 830.00 | 850.00 |
| 11 | PCC 1:4:8 | Cum | 3179.00 | 3300.00 | 3500.00 |
| 12 | RR Masanory | Cum | 3900.00 | 4000.00 | 4250.00 |
| 13 | Labour | Labour | 600.00 | 650.00 | 700.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதத்தில் எம்.எம்.கே கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் என்ற நிறுவனம் வரப்பெற்றதை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 279**

**பொருள் : 23**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குளோரின் அறையில் இருந்து கிணற்றுக்கு செல்லும் நடைபாதை மற்றும் புதிய சுற்றுச்சுவருக்கு பெயிண்ட் அடித்து பழைய சுத்திகரிப்பு அறை மற்றும் அலுவலகம், சுற்றுச்சுவர் ஆகியவற்றை புதுப்பித்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ள தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 280**

**பொருள் : 24**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–20–ன் கீழ் சாலை வடிகால் மற்றும் வடிகால் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.300.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019–ன்படி, உட்கட்டமைப்பு திட்டம் 2019–20–ன் கீழ் (TURIP) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மதிப்பீடு தயார் செய்ய Consultant நியமனம் செய்து மதிப்பீடு தயார் செய்யவும், மேற்படி பணிக்கு 1.5 சதவீதம் ரூ.450000/–க்கு (GST-18 சதவீதம்) ஆக மொத்தம் ரூ.535000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்
2. மேற்படி பணி மேற்கொள்ள தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 281**

**<u>பொருள் : 25</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாள்.**16.09.2019**–ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஒட்டன்சத்திரம் நகராட்சி நகராட்சி பகுதிகளில் வடிகால், கழிவு நீர், ஓடைகள் மற்றும் வாய்க்கால்களில் மழை நீர் தேங்கா வண்ணம் JCB வாகனம் மூலம் தூர்வாரும் முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.**257** நாள்.**20.09.2019**–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, **25.10.2019**–ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | APT டிப்பர் எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம். ரூ. | KMS எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம். ரூ. | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம். ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வடகிழக்கு பருவமழையின் போது ஓடைகள் மற்றும் கழிவு நீர் வாய்கால்களில் ஏற்படும் அடைப்புகளை சுத்தம் செய்ய துஊகூஷ 1 மணி நேரத்திற்கு டிரைவர் மற்றும் படி செலவு உட்பட | **950/–** | **1025/–** | **925/–** |
| 2 | வடகிழக்கு பருவமழையின் போது ஓடைகள் மற்றும் கழிவு நீர் வாய்கால்களில் ஏற்படும் அடைப்புகளை சுத்தம் செய்ய ழுவைவயஉாந 1 மணி நேரத்திற்கு டிரைவர் மற்றும் படி செலவு உட்பட | **3000/–** | **3200/–** | **2750/–** |
| 3 | வடகிழக்கு பருவமழையின் போது ஓடைகள் மற்றும் கழிவு நீர் வாய்கால்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் கழிவுகள் அகற்றம் பணிக்காக கூசயஉவடிச 1 நாளைக்கு டிரைவர் மற்றும் படி செலவு உட்பட | **4800/–** | **5250/–** | **4300/–** |

மேற்காணும் **3** நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றதில் கலம் எண்.**3**–ல் உள்ள ஜி.வி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. வடகிழக்கு பருவமழை பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 282</u>**

**<u>பொருள் :26</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் **2019–20** ஆண்டுக்கான **29.08.2019** முதல் **30.10.2019** முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0325 முதல் RF0444 முடிய, WS0073 முதல் WS0108 முடிய மற்றும் TFV029 முதல் TFV039 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**<u>தீர்மானம் எண் – 283</u>**